# வேளாளன்

## தூத்துக்குடி.

ஆசிரியன்:— மு. பொன்னம்பலம்.

வயது 1 } 1105-ளு சுக்ல ஸூ புரட்டாசி மீ 3-உ { மாதம் 6

"அன்பர்பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

## சமூக தனவான்களுக்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்.

கனவான்களே! நம்சமுகத்தில் அளவிலா ஆர்வங்கொண்டு நமது வேளாளனை ஆரம்பித்து என் வியாபாரத்தையுங் கவனியாமல் கைப் பொருளைச் செலவு செய்து பல கஷ்டங்களினிடையே ஆறு மாதங்களாக நடத்திவருகின்றேன். தங்களுடைய உத்திரவின்பேரிலும், தங்களின் உற்றார், உறவினர்களின் உதவியால், தங்கள் உத்திரவன்னியிலும், வேளாளனை ஆதரிப்பீர்களென்ற முழு நம்பிக்கையின் பேரிலும் அனுப்பினேன். தாங்கள் அனைவர்களும் அன்புடன் பெற்று வருகின்றீர்கள். ஆனால், தங்கள் சந்தாத் தொகைகளைப் பெரும் பகுதியினர் இன்னும் அனுப்பியுதவவில்லை. அனுப்பி யுதவாத அன்பர்களுக்கு நாலாவது இதழில் அறிவித்தபடி ஐந்தாவது இதழ்முதல் வி. பி யில் அனுப்பி வருகின்றேன். கனவான்களெல்லாரும் வி. பி யைப் பெற்றுச் சந்தாவைச் செலுத்தி வேளாளனை ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றேன். வி. பி யில் சந்தாவைச் செலுத்த மறுத்து விடுவீர்களாகில் எமக்கு மிகுந்த நஷ்டமும், கஷ்டமும், மனத்தளர்ச்சியும் ஏற்படுமென்பதைத் தாழ்மையாய்த் தெரிவிக்கின்றேன்.

—பத்திராதிபன்,

## நம் மரபும், நம் நகரும்.

நம்மரபைப்பற்றியுள்ள முற்கால நிலைமையையும் தற்கால நிலைமையையும் நாம் முதல் இதழ்த் தலைபங்கத்திலும் திரு. இ. வெண்ணிமாலைபிள்ளையவர்கள் முதலிய அறிஞர்களால் எழுதியுள்ள எழுதிவரும் கட்டுரைகளிலும் ஒருவாறு விளங்குகின்றன. ஆனால் நம் நகரில் நம்மரபைப்பற்றியுள்ள அனுபவமான முற்கால தற்கால நிலைமைகளையும் பிற்கால நிலைமைகளையும் எழுதவேண்டியதவசியமாயிருக்கிறது. சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்னுள்ள நம்மரபின் நிலைமைகளைப்பற்றிச் சிறிது எழுதுகின்றோம். வியாபாரத்துறையில் நம்மரபினர் மிகுதியும் சீரும் சிறப்பும்பெற்று வாழ்ந்தனர். பஞ்சு வியாபாரம் நவதானிய வியாபாரம் இரும்பு வியாபாரம் முதலிய எல்லா வியாபாரங்களும் பெரும்பாலும் நம்மரபினர்களால் கையாளப்பட்டு கண்ணிய வாழ்க்கை கைவரப்பெற்றார்கள். தற்காலமோ பஞ்சு வியாபாரம் நம்மரபினர் செய்யவில்லை, நவதானிய வியாபாரஞ் செய்யவில்லை, ஜவுளி வியாபாரம் இரண்டொருவர்தவிர மற்றவர்கள் செய்யவில்லை செய்கின்ற இரண்டொருவர் கடைகளும் பிரபலமாகவில்லை இரும்பு வியாபாரம் மாவியாபாரத்தைப்பற்றி என்ன எழுதுவது நம்மரபினர்யாருஞ் செய்யவில்லையென்பதான் எழுதவேண்டியதிருக்கிறது. வெங்காய வியாபாரம் மட்டும் நம்மரபினர் செய்து வருகின்றார்கள் யென்று ஒருவாறு எழுதலாம். அதுவும் முன்போல் நிலைப்பாகவும் செல்வச் செழிப்பாகவும் செவ்வனே நடத்துபவர்கள் மிகச்சிலரே. இனி நம்நகர் நகரபரிபாலனசபையில் நம்மரபினர் பத்துப்பேருக்கதிகமாக கவுன்சிலராக வீற்றிருந்தார்கள். தற்பொழுது மூவரே வீற்றிக்கின்றார்கள். இம்மட்டோடு நமது ஜில்லாவில் நம்மரபில் செல்வமிருந்த சீமானாகவும் ஒழுக்கம் அடக்கம் முதலியவைகளில் முதன்மை பெற்றவராகவுமுள்ள திருவாளர் சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் எழுவருடம் நம்நகர சபைத் தலைவராக வீற்றிருந்து நடுவு நிலைமையுடன் நிர்வாகஞ்செய்து வந்தும் சென்ற தேர்தலில் தோல்வியடையநேர்ந்ததென்றால் நம்மரபின் தற்கால நிலை நம்நகரில் எத்தகையதாக

இருக்கிறதென்று சற்று சிந்தித்துப் பாருங்கள். அந்தோ! நம் நகரின் ஜனத்தொகையிலும் நம்மரபினரே அதிகம். இங்ஙன மிருந்தும் நம்மரபினர் நிலைமை நாளுக்குநாள் நலிந்து வருவதன் காரணந்தானென்ன? என்று யாராவது ஆராய்ந்தறிய ஆசை கொள்கின்றார்களா? என்றால் இல்லை இல்லை என்றுதான் இயம்பஇயலும். நாட்டின் நிலைமையை நாலுபக்கங்களிலுஞ் சுற்றிப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு மரபும் சிறிது காலத்தில் மிகவிரைவில் முன்னேற்றமடைந்து வருகின்றன. நம்நகரிலும் மற்றொரு மரபு சிறிது காலத்தில் மிக உன்னத நிலையடைந்து வருகின்றதென்பது யாவரும் ஒப்பமுடிந்த தொன்றாகும், நாட்டின் நாலு பக்கங்களிலும் நம்மரபு உன்னத நிலையடையாமற் போனாலும் தாழ்ந்த நிலைக்காவது வாராமலிருக்கின்றதா? என்று பார்த்தால் மிகமிக நாளுக்குநாள் தாழ்ந்த நிலைக்குத்தான் விரைந்து வருகின்றது. ஆதலாற்றான் நாம் நம் மரபுபற்றிச் சிறிது தொண்டாற்ற முன் வந்தோம். கிராமங்களிலாவது நம்மரபினர் நிலை குறையாமலிருக்கின்றார்களா? என்றால் கிராமங்களிலும் பண்டு முதலுள்ள பயிர்த் தொழிலையும் கைவிட்டு வேறு தொழிலையும் கைக்கொள்ளாமல் கஷ்டப்படுகின்றனர். எனவே நம்நகரிலும் பிறநகரன்றிக் கிராமங்களிலும் நம்மரபினர் நிலை மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கின்றதென வெட்ட வெளிச்சமாக விளங்குகின்றது.

இனி நம்மரபினர் தாழ்ந்து வருவதன் காரணம் யாதென ஆராய்ந்து அறியவேண்டியதவசியம். முதலாவது முக்கிய காரணம ஒற்றுமையின்மையே. ஒற்றுமை இல்லாத ஒரு நாடோ ஒரு சமுகமோ ஒரு குடும்பமோ உயர் நிலையடையாததோடு தாழ்ந்த நிலையடைவது நிச்சயமும் அநுபவமுமானது. இது பற்றியே "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு" என்றுள்ள கவியும் காணப்பெறுகின்றது. இரண்டாவது காரணம் சுயநலம்; இது காரணமாக அழுக்காறு முதலிய காரணங்கள்பல உள. மேலும் தாழ்ந்து வருகின்றோம் என்பதையே ஒரு சிறிதும் உணராமல் நம்மிலும் உயர்ந்தார் யாருமில்லை யென்ற எண்ணம் இறுமாப்பு நம்மரபு மக்களிடத்துக் குடிகொண்டிருக்கிறது. [illegible]

தொழில் உத்தியோகம் முதலியவைகளின் வேறுபாட்டால் ஒருவரையொருவர் உயர்வு தாழ்வாகக் கருதுதலோடு அதனைப்பொதுக் காரியங்களிலும் புகுத்துகின்றனர். இன்னும் எழுதிக்கொண்டே போனால் இடம் போதாததாய்முடியும். ஆகவே நம்மரபினர் ஒற்றுமையைக் கடைப்பிடித்து அழுக்காறு முதலியவைகளை அடியுடன் அகற்றி அனாவசியமான ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து வரவுக்கேற்ற செலவுடன் சிக்கனமாக வாழ்க்கையை நடத்தி ஏழை மக்களுக்கு இயன்றவரை உதவி செய்து வாழ்தல் வேண்டும். தகுதிக்கேற்பத் தொழில்கள் செய்யவேண்டும். தொழிலை இழிவென்றும் குறைவென்றும் கொள்ளுதலாகாது. பெண்மக்களும் வீட்டு வேலையில்லாத வேளைகளில் தகுதிக்குத் தகுந்த கைத்தொழில்களைக் கடைப்பிடித்தொழுக வேண்டும். பெண்மக்கள் தொழிற்செய்வதை இழிவென எண்ணுதல் கூடாது. ஆனால் நம்மரபுப் பெண்களோ மணமகனுக்குச் சம்பளம் 25 ரூபாய் ஆனால் தண்ணீரெடுக்க ஆள் வேண்டுமென்கின்றனர். அதிக விலையுள்ள ஆடையாபரணங்கள் வேண்டுமென்கின்றனர். அந்தோ! மாயவலையில் மயங்கும் மணமகன் என்செய்வான் பாவம். கடன்பட்டோ களவாடியோ வேண்டியவற்றை வாங்கிக் கொடுக்கின்றான். இறுதியில் அவன் படும் பாடும் ஆண்டவனே அறிவான். "கடன் கொண்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்றதும் கவனித்தற்குரியது. இன்னும் நடுத்தர வகுப்பில் பெரும்பகுதியினரான பெண்மக்கள் வீதியில் நடந்து செல்லலை இழிவென்று எண்ணுகின்றனர். செல்வச் சீமாட்டிகளைப்பற்றியோ சொல்லத் தேவையில்லை. தண்ணீரெடுத்தல் வீதியில் நடத்தல் உடல் நலம் உண்டுபண்ணுவதோடு பொருளும் மிஞ்சும். கைத்தொழிலைக் கைக்கொண்டு ஒழுகினால் தொழிலுக்கேற்ற பொருள் சம்பாதிப்பதோடு சோம்பலின்றியும் அக்கம் பக்கத்தாரிடம் வீண்பேச்சுப் பேசாமல் விவகாரத்தை விலைக்கு வாங்காமல் வீண்சண்டை போடாமல் நல்வாழ்க்கை நடத்தலாம். நம்மரபுப் பெண்மக்களைப்பற்றிச் சிறிது அதிகமாக எழுதிவிட்டோம். ஏனென்றால் நம் வாழ்வின் உயர்விற்கு இன்றியமையாது வேண்டப்படுவது பெண்களின் முன்னேற்றமே. இத்தகைய முன்னேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்படும் கல்வி கற்கவேண்டுவதும் மிக அவசியமே. இதுவரை நம் மரபின் குறைகளையும் அதனை நீக்கும் முறைகளையும் ஒருவாறு எடுத்து எழுதினோம். மறுமுறை மற்றைய மரபினர் உயர்வடைந்துவரும் வழியையும் அதனில் நாம் அறிந்துகொள்ள வேண்டியவைகளையும் எழுதுவோம்.

# ஔங்கர ஆராய்ச்சி.

திருக்குறளாராய்ச்சியாளரும் தமிழ்மொழித் தொண்டருமான
உயர்திரு தே. தி. க. மு. நித்தியாநந்தம் அடிகள்
திருமங்கலம்.

ஔம் என்பது ஓர் தனித் தமிழ் மொழிச் சொல்லாகும். இஃதை வடபாஷையினரும், ஆரியப்பாஷையினரும் தத்தம் பொருளாகக் கொண்டுளதோடு, அஃது தத்தம் பாஷையின் தோற்றமே எனவும், தமிழ் மொழி தமதெனக் கூறின், அதன் பழைய நூற்களாகிய "தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும்" துருவித் துருவிப் பார்க்கினும் ஔம் என்ற ஓர் சொல்லேனுமுளவா? இல்லையே. அவ்வாறிருக்கப் பின் அச்சொல் எவ்வாறு தமிழ் மொழிச் சொல்லாகும் என்றும், எங்களுடைய "வட ஆரிய பாஷைகளில்" முறையேயுள்ள உபநிடதங்கள், வேதங்கள் முதலியவற்றில் எங்கு நோக்கினும் அச்சொல் பரவிக் கிடப்பதை விரிவாய்க் காணலாமெனவும் வாதிக்கின்றனர். ஆனால், இவ்வாதத்தை; பழந் தமிழ்மொழிப் பழ நாகரீக சான்றுக்கணிகலனாயின்றுமோரளவு விளங்கானின்றிலங்கும் (இலங்கை) யாழ்ப்பாணத்துப் பாமரத் தமிழர்களுங் கூட ஒப்பமாட்டார்களெனின்? அறிவுலக மென்னனமேற்குமோ!

மேலும், அப்பாஷையினரைத் திரும்ப யாம், ஐயா! தாங்கள், இந்த ஔம் என்ற சொல்லானது தங்கள் நூற்களில் பரவிக்கிடப்பதாகக் கூறுவதொன்றைத் தவிர, "அறிவு, வழக்கு, (யுக்தி, அநுபவம்), உருநிலை, உருதிநிலை, தோற்றநிலை, பொருள்நிலை, சான்றுநிலை" முதலியவற்றோடு பொருந்த யிச்சொல்லானது தங்கள் பாஷையிலிருந்துதான் தோன்றியதெனத் தெளிவுபடுத்த (நிரூபிக்க) இயலுமாவெனக் கேட்பின், மோன (மௌன)மேதான் விடையாகுமெனக் கூறல் மிகையாகா. ஆனால், ஔம் என்ற சொல்லானது தமிழ் மொழியினிடத்தே யிருந்துதான் தோன்றியதென்பதற்கு மேலே குறிப்பிடப்பெற்றுள வழிகள்

யாவற்றானும் பொருந்த விளக்கித் தெளிவு பெற்ற உண்மையைக் கூறுவாம்.

## ஔம் என்பது தனித் தமிழ்மொழித் தனிச் சொல்லே!

(1) நூற்கள்:— தொல்காப்பியத்தின் பொருளிலக்கணக் கப்பிரிவில் (செய்யுளியல்), "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழி தானே மந்திரமென்ப" என்று 179-வது சூத்திரத்திலும்; திருக்குறளின் அவாவறுத்தல், நீத்தார் பெருமை என்ற பிரிவுகளில் முறையே "ஆராவியற்கை யவா நீப்பினந் நிலையே, பேராவியற்கை தரும், என்றும்; நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும், என்றும" கூறப்பெற்றுள குறள் வெண்பாக்களிலும்; முறையே குறிப்பிடப் பெற்றுள "நிறை மொழி, மறை மொழி; பேராவியற்கை, நிறை மொழி, மறை மொழி" என்ற சொற்களின் பொருளேதான் ஔம் என்பது; நூலறிஞர் யாவராலுமறிந்ததொன்றேயாம்.

(2) அறிவு:—ஔங்கானிலிருந்து "மண், தண், தீ, காற்று, வெளி" எனுமைந்தும் நேர் நிறை நிலையிற் பிறந்து விரிந்து உலகாயிலங்குவது போன்று, அதே ஔங்கானிலிருந்து "அ, இ, உ, எ, ஒ" என்ற குறிலுயிரைந்தும் நேர்நிறையிற்றோன்றி, (அதன் விரிவே) தமிழ் மொழியாகி, யாவுமாய் நின்றிலங்கும் ஔங்காரத்தை விளக்க வல்ல மறையாய் (வேதமாய்) இயங்குகின்றதென்பதை; மொழி, பாஷைகள் முதலியவற்றை ஆராய்ந்தறிந்த பேரறிஞர் எவர்க்குந் தெளிவுபெறச் செய்யவேண்டுவதொன்றன்றாம்.

(3) தமிழ்மொழியிலுள்ள பன்மைச் சொற்கள் யாவும் ஔங்கர முடைமையே. உதாரணமாக "பிறப்போம், வளர்வோம், வாழ்வோம், நுகர்வோம், அடைவோம்" என்பனவாம். இன்னும்; யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் என்றும் போலின்றுங் கூட, "ஆம், சரி, முடிவு" என்ற பல பதங்களுக்குப் பிரதியாக ஔம் என்றே வழங்கி வருதலையும், யாவருங் கண்கூடாகக் கண்டு செவியாரக் கேட்கலாம்.

(4) உருநிலை:—தமிழ் மொழியிலுள்ள ஓம் ஒன்றே; உலகப் பொருட்கள் யாவும் எந்நிலை உருவிலுளவோ அந்நிலையி லுளதென்றும், மற்ற எப்பாஷைகளிலும் அந்த உரு நேர் நிறை நிலையினெழுத்தன்றிற் கிடையவே கிடையாதென்றும் உள்ள மெய்மையைப் பாரபட்ச மற்றோர் யாவருந் தாமேயுணர்வர்.

(5) உருதிநிலை:— உலகத்திலுள்ள அணுக்களும், பரம அணுக்களும், முறையே விஞ்ஞான, மெஞ்ஞானக் கண்களுக்குத் தோற்ற வல்லதாமென்றும், அவைகளின் வடிவம் சற்றேறக் குறைய கோழி முட்டையின் வடிவம் போன்றதே யென்றும், மேனாட்டுக், கீழ்நாட்டு விஞ்ஞானிகளும், பழந்தமிழ் மெஞ்ஞானி களும் ஒருங்கே கூறியுள்ளதைக் கற்றோரெவருக்கும் அதிகங் கூறத் தேவையிரா.

(6) தோற்றநிலை:—"பூமி, சூரியன், சந்திரன், நட்சேத்தி ரங்கள் முதலியவைகளும்; மக்கள், விலங்கு முதலியவைகளின் ஆசன இருப்பக்கமும் தலையுஞ்சார்ந்த உருவும்; முகம், இருதயம், கருஉரு, முட்டைகள், முதலிய இன்னும் பலவும்; எவ்வுருவிற் தோற்றம்பெற்றுக் காணப்பெறுகின்றனவோ அவ்வுருவே தமிழ் மொழி ஓம் உருவு என்பதா மென்பது தமிழ்மொழி மட்டும் உணர்ந்தாரே கூட நன்கறிவர்.

(7) ஓம் என்பதிலுள்ள "அ + உ + ம" என்ற அகர, உகர, மகரங்களைச் சொற்களாகக்கப் பொருள் கொள்வதில் தமிழ் மொழி யொன்றே நேர் நிறை நிலையிற் சொற்களாகி மெய்ப் பொருள் தருவதாம். அதாவது — அ = அன்பு, உ = உண்மை, ம = மங்கலம் என்பனவாம். ஆனால், மற்றேனைய பாஷைகளி லுள்ள ஓம் என்பதும், அதன் மூவெழுத்துக்களுக்குரிய சொற் களும் பொருளும் ஒன்றிற் கொன்று பொருந்தாவளவில் வெகு விசித்திரமாகவே யிருக்கும். இஃதன் பொருள் விளக்கந் தமிழ் மொழி ஒன்றிலேதான் உண்மைகதுப் பொருந்துவன வென்பது, உலகிற் பல பேரறிஞர்கள் கடவுளின் நிலையைப்பற்றிக் கூறியுள்ள தும் கூறுவதும் எதுவெனக் கற்றுங் கேட்டும் வருகின்றோமோ அவைகளேதான். அவைகளாவன.—கடவுளென்பது அன்பே

என்றும், சத்தியமே கடவுளென்றும், கடவுளென்பது இன்பம் பயக்கும் அறநெறியே என்றுங் குறிப்பிட்டுத் தனித்தனியே பொருள் கூறியுள்ளார்கள்-கூறுகின்றார்கள். கிரீக், இப்ரூ முதலிய பாஷைகளிற்கூட முறையே ஆமென் (ஔம்) என்ற பிரணவத்திற்கு உறுதி, உண்மை" என்றே பொருள் கூறப்பெற்றுளது. ஆகவே; தமிழ்மொழி கூறும் பொருள் நிலையே இறுதியும், உறுதியும் உண்மையுமாகுமென்பதிற்கிஞ்சிற்றுமையமின்றாம்.

8. சான்றுநிலை:—ஆரியப் பிரிவினர்களாகிய கிறிச்தவர்களும், இச்லாமியர்களும் தம்மிடத்துக்கொண்டுள "ஆமென், ஆமீன்" என்ற பிரணவப்பொருட்களின் மூலத்தைக் கவனிக்கின், அஃது ஒவ்வொன்றும், ஆம் என்ற தாதுவின் பிறப்பேயென்றும், அந்த ஆம் என்பதே ஆரியர்களின் பிரணவமாமென யூகித்தறியத்தக்கதாமென்றும், ஆராய்ச்சிக்காரர் யாவரும் ஒருங்கே கூறுகின்றார்கள்.

(9) இவைகளெல்லாம் ஒருபுறமிருக்க, குமரப்பனும் நமதப்பன் கந்தப்பனெனும் முருகப்பனே, இந்த ஔம் எனும் குடிலை மூலத்தை (பிரணவ மந்திரத்தை) உலகிலேயே முதல் முதல் அறிந்தவனென்றும், அஃதைக் கண்டாண்டின்புற்றவாரே உலகமுங் கண்டாண் டின்புறக் கண்டின்புறக் கருதியவராய்த் தன் தந்தையாம் உயர்திருச் சிவனடிகளுக் குபதேசித்து, அவர் மூலம் உலகிற்கருளியதாக கர்ணபாரம்பரை கூறுகின்றதோடு, அதனாலே; நமதப்பனும் முருகப்பனுக்கு, "ஔங்கார ஆசிரியன், தந்தைக்குத் தந்தை, குருநாதன், சுவாமிநாதன், தகப்பன்சாமி" என்ற பல சிறப்புப் பெயர்களுண்டாகிற்றென்றும் கூறி வழங்கி வருதலை இன்றும் நாம் காண்கின்றோம்

குறிப்பு:—தொல்காப்பிய காலத்தின் பிற்பட்ட வேறுபல நூற்களாகிய, திருமூலநாயனாரியற்றப்பெற்றுள "திருமந்திரம் தேவார திருவாசகங்கள், சித்தர் நூல்கள், தமிழ் முனிவர்களின் வைத்திய நூற்கள்" முதலிய இன்னும் பல நூற்களிலுங்கூட இந்த ஔம், என்ற சொல் பரவிக்கிடத்தலை விரிவாய்ப் பொருளோடுங் காணலாம்.

இந்த ஔம், ஓம்காரம் என்று வழங்கிவரினும் அஃது "ஔங்காரம்" என்றிருக்கவேண்டுவதே நேர் நிறை முறையாகும். பின்னரிவ்வாறு ஓங்காரம் என்று வழங்குவானெனின்? தமிழ் மொழியிலுள்ள அகர முதலியாவும் ஆரியத்தில் அகாரம் என்றே வருதலும்; கோடரி வழக்கில் கோடாலி எனத் திரிபுடன் வழங்கி வருதலும்போன்று முறையே ஆரியர் கலப்பினாலும், வழக்கத் திரிபாலுந்தான் நாமும் "ஓங்காரம்" எனத் திரிபுடன் வழங்கி வருகின்றோம்.

இவைகளையெல்லாம் உற்று நோக்கின் "ஔம் என்பது தனித் தமிழ் மொழித் தனிச் சொல்லேயாம்" என்பது தெளிவு பெற்ற உண்மையேயாம். மேலும், இன்னொன்றைக் கூறி யிஃதை முடித்துக்கொள்வாம். அதாவது, மொழி, பாழை, ஆகிய விரண்டின் சொற்பொருட்களை உற்று நோக்கினும், மொழியென்பதும் ஔமின் தனியியல் நிறை யொலி யென்றே பொருள்பெறுகின்றது. ஆனால், பாழை(பாஷை)யென்பதோ ஔமினியலோசைகளின் இசைபெறும் செயற்கையொலி யொன்றே பொருள்பெற்றுள்ளதாம்.

ஆகலால், இனி, மேலே ஔங்காரம் என்பது யாது? அதன் கட்டளை யென்ன? அதனால் அடையப் பெறும் பயன் யாது? என்பவைகளைப்பற்றி யோரளவு ஆராய்வாம்.

## ஔங்காரம் என்பது யாது?

ஔங்காரம் என்பது யாவிற்கும் வித்தான முதற் பொருள். இவ்வித்தின்றி எவ்வித வினையும் விளைவுங் கிடையா. இதிலுள்ள அன்பு + உண்மை + மங்கலமே உலகின் உடல் உயிர் வாழ்வு என்ப பரிணமித்து இலங்குகின்றது. இஃது அன்றின்றென்றும் ஒவியா யிலங்கி ஒளி வீசி அருள் சுரத்தலாலேயே அவ்வருளால் அவ்வருளே வாழ்வாகவும், அதன் ஒளியே வாழ்வுடைய பொருட்களாகவும், அதனொலியே பொருட்களின் உயிராகவு மியங்குவதையே, நாம், நானவகை யோனிகளான "பை, முட்டை, வியர்வை, நிலம்" எனும் வாயிலாக, "மக்கள், மாக்கள் (தாங்கினங்

கள்), விலங்கு, (நாற்கால் மிருகங்கள்), ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, தாவரம் (நிற்பன)" என்னும் எழு வகைத் தோற்றங்கள் ஏதோவோர் கணக்களவில் தோன்றி வாழ்கின்றன என விரிவாய்க் கூறுகின்றோம். இவ்வொலியே, இனனும் முழக்கஞ் செய்யும் கடலொலி, இதயத்துள் இரைச்சலிடும் வளியொலி, புயலாயசைகொள்ளும் பேரொலி, மக்கள் வழக்கில் கொண்டுள்ள பேச்சொலி, இசையிலின்பந்தரும் நகையொலி, யெனப் பல நிலையில் பெயர்பெற்றிசைக்கின்றது. ஆகவே, ஒலியின்றேல் ஒன்றுமில்லை யெனலாம்.

(தொடரும்)

---

## நமது சமய ஒழுக்கம்

திருவாளர் ஆ. சங்கரநாராயண தேசிகர் அவர்கள்
மூன் கொடாச்சி

முன்னர் மொழிந்த அவுத்திரியில், முதற் பிரிவாகிய சமய தீக்கையைப் பெற்றுக்கொண்ட சைவசமயி * சரியை யென்னும், சிவபுண்ணியங்களை இம்மையிற் புரிந்து, அதனால் சிவ சாலோக பதவியை மறுமையில் அடைவனென்றும், விசேஷதீக்கையைப் பெற்றுக்கொண்ட சைவ விசேஷி ‡ கிரியை யென்னும், சிவ புண்ணியங்களை இம்மையிற் புரிந்து, அதனால் சிவ சாமீப பதவியை மறுமையில் அடைவனென்றும், நிருவாண தீக்கையைப்பெற்றுக்கொண்ட சைவ நிருவாணி § யோக, ஞான மென்னும் சிவ புண்ணியங்களை இம்மையிற் புரிந்து, அதனால் சிவசாரூப, சிவ

---

* தடாகம் அமைத்தல், கிணறுகட்டுதல், சோலைவளர்த்தல், நந்தன வனம் ஏற்படுத்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், மலர் கொய்தல், மாலை கட்டுதல், திருக்கோயில் அலகிடுதல், மெழுக்கிடுதல், இவைகளைத் தானு வது அல்லது தனது ஏவலாட்கொண்டாவது புரிதல்.

‡ சிவ பூஜை செய்தல், சைவ சாஸ்திரங் கற்றல், கற்றுக்கொடுத்தல், அடியார்களின் திருத்தொண்டு புரிதல், நித்திய, நைமித்திக, சைவ கன்மங் களைச் சரிபெறப் புரிதல்

§ மேலே கண்டவைகளுடன் காமிய மென்னும் சைவ விரதாதிகள், யோக சாதனைகள், புரிதல்

சாயுச்சிய மென்னும் பதவிகளை மறுமையிலடைவ னென்றும், சைவாகமங்கள் முறையிடுகின்றன.

இவைகளைத் தவிர நிருவாண தீக்கையில், சத்தியோ நிருவாண தீக்கை என்றும், அசத்தியோ நிருவாண தீக்கை யென்றும், உலோக தருமிணி தீக்கை யென்றும், சிவதருமிணி தீக்கையென்றும், நான்கு பிரிவினையுண்டென்றும் அவைகள் சிஷ்ய பரிபாகத்துக்குத் தக்கபடி செய்வதெனவும், அதனை 'ஞானாதனுவளி, என்னும் ஆகமத்தில் கூறுகின்றதாவது.

'சத்தியோ நிருவாண தீக்கை-உத்தம குருவால் ஆறு அத்துவ சோதனையும் சிகாச்சேத ஓமமும் புரிந்து, பரிபக்குவம வாய்ந்த சிஷ்யனுடைய ஆன்மாவை சிவ சாயுச்சியத்தில சோதக மாத்திரத்தில், அவனது ஆன்மா தேகநீக்கம் பெறுவது என்றும், அசத்தியோ நிருவாண தீக்கை-அவ்வாறன்றி பிராரத்த கன்ம அனுபவத்துக்குப்பின ஆன்மா சிவசாயுச்சியம பெறுவதெனறும், உலோக தருமிணி தீக்கை-சிஷ்யனுடைய பாபகன்மாவைச் சோதனை புரிந்து, இல்லறத்திலிருக்க விரும்புவோனுக்குச் செய்யப் பெறுவதெனறும், சிவ தருமிணி தீக்கை-சிஷ்யனுடைய பாப புண்ணிய கன்மாக்களை நன்றாகச் சோதனை புரிந்து, துறவறத்திலிருக்க விரும்புவோனுக்குச் செய்யப்பெறுவதெனறும், நமது ஆகமங்களில நவிலப பெறுகின்றன.

இவற்றுள் நாம கால தேச வர்த்தமானத்துக் கேறப, சமய தீக்கையும், விசேஷ தீக்கையும், பெற்று சைவநெறிதவிரா தொழுகுதல் இன்றியமையாததாகும், எனபதுடன ஆண் பெண் எனனும இரு பாலோரும ஒவவொரு குடும்பத்திலும், விதிமுறை வழாது பதினொனறும பிராயத்திலிருந்து பதின்மூனறும பிராயத்துக்குள், அவவிரு தீக்கையும அடைவே பெற்றுக்கொள்ளல வேண்டும இவர்கள் பெண்டுகள் தானே! சிறு பிராயத்தினா தானே! என்று அசட்டை செய்யாது அனைவர்களும பெற்றுக் கொண்டு நெறி முறை தவராது நிலைக்கச்செய்வது, ஒவவொரு குடும்பத்தையும நடாத்தி வரும், நமது சைவ வேளாண் மக்களின் இன்றியமையாத இருக்கடமையாகும

ஏதனாலெனின சிவதீக்கையுடையவன அதனைப் பெறாதவன் எத்துணை மேனபாட்டை மற்றைவைகளாற பெற்றானாயினும அவன் உடனிருந்து உண்ணவும, பார்த்திருகக உண்ணவும், தீண்டியதை உண்ணவும கூடாதெனறு நமது சைவாகமத்திலே,

''சதுர் வேத தரோவிப்ரோ சிவ சமஸ்ககார வாஜித: சண் டால: பாண்டு ஆஸ்ரத்ய யதாபாகீரதி ஜலம்'' நான்கு வேதங்களை யும அறக் கற்ற அநதணனே ஆயினும, அவன சிவ (தீக்கை யென்னும) சமஸ்ககாரம பெற்றுக்கொள்ளாதவரை, பறையனு டைய பாததிரததில (மொண்டுவநதுள்ள) கங்கை நீர் போலும அவமதிககப்பெறுவன, என்றும.

''மாதரோ பிதரோஸ்ச்சைவப்ராதரோ பாந்தவோஸ்ஸதா-சிவதீக்ஷாவிஹீநநது பாகம கோமாமஸ பக்ஷணம''

பெற்ற தாயாராயினும, தந்தையாராயினும,சகோதராகளாயி னும, மிகுந்த கிளைஞராயினும சரியே; அவர்கள் சிவதீக்கையைப பெற்றுககொளளாமலிருநதால அவாகள் கைபபட்ட ஆக்கிய பா கத்தை சிவதீககை பெற்றுளள ஒருவன் புசிததல் எனறால், அது பசுவின் மாமஸத்தைப் புசித்ததோடொகரும

என்றும கூறியிருபபதனால அத்தகு தீக்கையை உத்தம ஆசிரிய ரை யடைநது, அனைவர்களும விடாது முறைபப பெறறுககொ ள்ளவேண்டும. இனி உத்தம ஆசிரியரின இலககணத்தை உணாந்துகொளவோமாக.

(தொடரும்)

---

## குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை.

R. M. அண்ணாமலை செட்டியார்

(முன் 5-வது பத்திரிகைத் தொடர்ச்சி)

குரு:— முதலாவதாக அச்சிறு தெய்வங்கள் உன்னிடம வநது உயிர்ப் பலி கேட்கவில்லை. ஒருவாறு கேட்பதாக வைத் துககொளவோம உனது துன்பத்தை நீககுதறகு உன்னிலும தாழ்ந்த உயிர்ப பிராணிகளைப் பலி கேட்கும தெய்வமானது

உன்னிலும் மேலாயினோர் அவைகளிடம் தங்கள் குறையை முறையிடுங்கால் உன்னையே கொண்டுவரும்படி சொல்லுமல்லவா? அப்படிக் கேட்கும் தெய்வம் ஒரு தெய்வமாகுமா? அதனைப் பேயென்றுதானே கொள்ளவேண்டும். இன்னும் உன்னறியாமைக்கோர் விளக்கம் காட்டுதும் கேட்பாயாக. அவரை விதைத்தால் அவரை முளைக்கும். துவரை விதைத்தால் துவரை முளைக்கும். அவரை துவரையாகாது துவரை அவரையாகாது. இதுவே உண்மை விதி. இதுபோல நீ ஓர் உயிருக்கு இன்பஞ் செய்தால் நீயும் இன்பமடைவாய். துன்பம் செய்தால் துன்பமடைவாய். உயிர்ப் பலி கொடுத்தலோ ஓருயிர்க்குப் பெரியதோர் துன்பத்தை விளைப்பதாகும். எனவே, அவ்வுயிர்க்குச் செய்த தீவினையின் பயனாக நீயும் துன்பமடைய வேண்டி வருமேயல்லாது இன்பமடைதல் கூடாது. இவ்வாறன்றி உயிர்ப் பலி கொடுத்தலால் நீ இன்பமடைவாய் என்று சொல்வதானது விரோத விதியேயன்றி உண்மை விதியல்லவென்றறியவேண்டும். மேலும் கொஞ்சம் விரிவாகக் கூறுவாம் கேட்பாயாக.—எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களின் அறிவு விளக்கத்தின் பொருட்டு ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உடல் வகுத்துக் கொடுத்திருக்கின்றார். அது எதுபோலவென்றால் தகப்பன் பிள்ளைகளுக்குச் சட்டை தைத்துக் கொடுக்குமாதிரி இறைவன், உடலாகிய சட்டையைத் தைத்துக் கொடுத்திருக்கின்றார். பின்னையின சட்டை அழுக்காய்ப்போய்விட்டாலும், கிழிந்துபோய்விட்டாலும் அது இனிப் பயன்படாதென்று கண்ட தகப்பன் அப்பழைய சட்டையை வாங்கிக்கொண்டு, புதியதோர் சட்டையைத் தைத்துக்கொடுப்பான். அதுபோல எல்லாம் வல்ல இறைவனும் தம் பிள்ளைகளாகிய உயிர்கட்குக் கொடுத்த உடலாகிய சட்டை பழுதுபட்டுப் போகுமானால் அது அவ்வுயிர்க்குப் பயன்படாதென்று கண்ட தந்தை அப்பழைய வுடலை வாங்கிக்கொண்டு புதியதோர் உடலைக் கொடுப்பார். இக்கருத்துக்கு மாறாகத் தந்தை தந்த சட்டை தனக்குப் பொருந்தவில்லையென்று காணுகக் கழற்றி எறிந்துவிட்டால் தந்தையின் கோபத்திற்காளாகி நாள் எல்லாம் சட்டை கிடையாமல் வருந்தவேண்டியதுதானே?

அதுபோல் ஆண்டவன் தந்தவுடல் தனக்குப் பொருத்தமில்லை யென்று தற்கொலை செய்துகொண்டாரொருவனும் ஆண்டவன் கோபத்திற்காளாகி நாளெல்லாம் உடல் கிடையாமல் இருளுலகத்திற் பேயாய்ச் சுற்றித்திரியவேண்டியதுதான். இப்பிறவியிலோ ஆண்டவன் உனக்கு மேலான மனித உடலைத் தந்துளார். மேற்கூறியவாறுல் உன் உடலைக் கூட அழிப்பதற்கு உனக்கு அதிகாரமில்லாதிருக்குமானால், எக் காரணத்தைக்கொண்டாவது பிறவுயிர்களின் உடலை யழித்தற்கு உனக்கேது அதிகாரம்! பெரிய மீனுக்குச் சிறிய மீனிரையென்ற மாதிரி வாய் பேசமாட்டாத சாந்தகுணமுள்ள சிறுயிரைக் கொலை செய்தற்கு எவ்வாறு மனந்துணிகின்றதோ! அறிகிலேம். குடிகட்குச் செய்த தீமை அரசனாற் பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். அரசனுக்குச் செய்த தீமையோ பொறுக்கப்படமாட்டாது. ஆதலால் கடவுள் உயிர்கட்கு உடல் கொடுத்தலாகிய தொழிலைச் செய்துகொண்டிருக்க, அவர் கருத்துக்கு மாறாக அவ்வுடலைச் சிதைக்க நினைத்தாலும் செய்தாலும் எல்லாம் வல்ல இறைவனை மீளா நரகத்திற் செலுத்திவிடுவானென்றறியவேண்டும். இக் கருத்தையே "கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை, வல்லிடுகாரர் வரி கயிற்றாற் கட்டிச், செல்லிடு நீயென்று தீவாய் நரகிடை நில்லிடு நீயென்று நிறுத்துவா தாமே" என்றருளிய திருமூல நாயனார் திருவாக்கும் வலியுறுத்துவதாகும். இதனால் உயிர்ப் பலி கூடாதென்று வலியுறுத்தப்பட்டது.

மா:—தெரியாதனவெல்லாம் தெரிவித்த என் குரு மணியே! தாங்கள் இதுகாறும் அருளுச்செய்தவற்றை அப்படியே ஒப்புக்கொண்டேன். இவ்வரிய உபதேசத்தால் அங்கிங்கெனாதபடி எங்கும் சர்வ வியாபகமாகவும் இறப்புப் பிறப்புக்களிற் கட்டுப்படாததுமான முழுமுதற் கடவுளாகிய பொன்னம்பலவாணரே எனக்குக் குல தெய்வமென்றும், ஏக தேச வியாபகமும் இறப்புப் பிறப்புக்களிற் கட்டுப்பட்டதுமான ஏனைச் சிறு தெய்வங்கள் எனக்குக் குல தெய்வமல்லவென்றும், எக்காரணங் கொண்டும் எத்தெய்வங்கட்கும் எவ்வுயிர்களையும் பலி செய்தல்

கூடாதென்றும், இதை மீறி உயிர்ப் பலி செய்தவர்கள் மீளா நரகத்திற்காளாவரென்றும சுருதி, யுக்தி, அநுபவ வாயிலாக விளக்கியதை உள்ளங்கை நெல்லிக்கனி போல மிகவும் விளக்கமாகத் தெரிந்துகொணடேன். இந் நன் நெறியை யான் கடைப்பிடித்தொழுகலோடு என் குடும்பத்தாரையும இவ் வொழுக்க நெறியில் நிறுத்துதற்கு எல்லாமவல்ல இறைவன் திருவருள் புரியவேண்டும, தங்கள் பொன்னுன திருவடிகட்கு அடியனேன் வணக்கம பெரிதும உரியதாக.

---

## நன்னிலவள்ளி அல்லது நங்கையினடக்கம்

---

ஈழநாடு,—ஸ்ரீமதி செல்லம்மாள் அவர்கள்.

(முன் 5-வது பத்திரிகைத தொடர்ச்சி.)

வயதாகிவிட்டபடியால் திடீரென எழுந்திருக்கவு முடியவில்லை, நான் உட்கார்ந்திருக்கவும நீ நின்றுகொண்டிருப்பதும சரியில்லை, சற்று பொறுமையோடு உட்கார்ந்திருந்து நான கேள்பதற்குப் பதில சொல்லவேண்டுமென்று சாநதமாய்க்கூறி, என்னை வெளியே போகச் சொல்லும நீ யார்? எவ்வளவு காலமாய் இவ்விடத்திலிருந்து வருகிறாய்? இவ்விடத்தில உனக்கு முன்னிருநதது யார்? அவருககு முந்தியிருந்தது யாரென்று உனககுத் தெரியவருமா வென்று கேட்கவும நான்தான் இநத வீட்டுச் சொந்தக்காரன் இதற்குமுன் இநத வீடு முதலியா ரொருவருககுச் சொந்தமாயிருந்தது. அவரது வாரீசுகளால்த்தான் எனக்குக் கிரயம், முதலியாரது மூல தஸ்தவேஜகளைப் பாாககும்போது இது ஒரு ஐயஙகாருககுச் சொந்தமா யிருந்திருககிறது. பொது மனையாய்க்கிடந்த யிடத்தை, சிலரது ஆமோதிப்பின்பேரில் தாசில்தாரொருவரால் ஐயஙகாருககு ஜாரி செய்யபபட்டு ஐயங்கார்தான முதலாவது கட்டிடம கட்டி வாழ்ந்திருககிறாரென்று சொந்தககாரர் சொல்லவும இதிலிருநதாவது இது சத்திரமென்று தெரியவில்லையா? சததிரத்திலும யாரும நிலைத்திருப்பதில்லை. அதைபபோலவே இவ்வீடு மிருந்துவருகிறது. இதை யுததே

சித்துத்தான் சத்திரமென்று சொன்னேன். நான் சொன்னவை களுக்கு கோபங்கொள்ளவேண்டாம். நானேசந்நியாசி இன்றைக் கோரிடம் நாளைக்கோரிடம். சுற்றுமுற்றும் பார்த்தேன் வெளித் திண்ணையாயுள்ள இடமொன்றுமில்லை. உள்ளே நுழைந்து அந்த வாசலோரத்திலேயே வெகு நேரம் நின்றேன் மழையும் விட்டபாடில்லை. காற்று வேகத்தினால் தன்படியே கதவு திறந் தது உள்ளே பார்த்தேன் ஒருவருமில்லை. சற்று சாய்ந்திருப் போமென்று வந்து சாய்ந்தேன் அசதியால் நித்திரைபோய் விட்டேன்.

ஆனால், நானுனக்கு ஒன்று சொல்லுகிறேன். யாரும் அறி முகமில்லாதார் வரக்கூடும். திடீரென ஒரு மழை, வெயிலுக்கு ஒதுங்கி நிற்க நேரிடும். இதற்கேற்ற வெளியிடமாய் ஒன்றிருக்க வேண்டும். இதனாலேயே முன்னோர்கள் வீட்டோரம் ஒட்டுத் திண்ணை யொன்று கட்டிவிடுவது வழக்கம். இதனால் சத்திரம வைப்பதையொத்த புண்ணியப்பகுதி யெய்துமென்று கூறவும், இதனைக்கேட்ட வீட்டுக்காரர் சுவாமி நீங்கள் சொல்வது வாஸ்த வம்தான் இக்கால நாகரீக போக்கிற்கேற்ப நடந்துகொள்ள வேண்டுமல்லவா? தவிரவும், சில ஆசாமிகளுக்குத்தங்க, கொஞ்சம் இடம் கொடுத்தால் நரிக்குக்கொஞ்சம் இடங்கொடுத்தால் கிடை க்கு இரண்டு ஆடு தூக்குமென்பதுபோல் பலவித இடையூறு களும் ஏற்படுகிறது. நீங்கள்கூட கேட்டதில்லையா? "பெரிய வாள் வருகிறார்கள் சொம்பைத் தூக்கி உள்ளே வையுங்கள்" என்று சொல்லும் வாக்கியத்தை; இன்னும் எத்தனையோ வித மான நிகழ்ச்சிகளெல்லாம் நடந்துவருகிறது.

மேலும் நீங்கள் சொல்லுகிறபடி ஒட்டுத்திண்ணை கட்டவோ அறை ஒதுக்கிவைக்கவோ இடம் காணாது. உள்ள பழக்கத்திற் கே இடம் காணாதிருக்கிறதென்று சொல்லவும், சந்நியாசி நீ சொ ல்வது பொருத்தமாயில்லை, யாரோ ஒருவன் எங்கேயாவது ஒரு தவறு செய்துவிட்டால் அதை எல்லாருக்குங் கற்பித்து குறை கூறுதல் பொருந்தாது. ஏகதேச நிகழ்ச்சிகளை விதியாகக் கொள் ளுதல் தகாது. வீட்டிலுள்ள ஒரு பொருளைக் காணாவிட்டால்

பிறருக்குத் தங்க இடங்கொடுத்ததினால்தான் இவ்வளவும் நேர்ந்துவிட்டதென நினைத்து ஒருவருக்கும் இனி தங்க இடங் கொடுக்கக்கூடாதென்று தீர்மானஞ் செய்துகொள்வது சரியாகமாட்டாது. பிறருக்குத் தங்க இடங்கொடாத வீட்டிலும், இடம் அமைத்திராத வீட்டிலும் எத்தனையோ திருட்டுகள், ஏமாற்றங்கள், வேறுபல நிகழ்ச்சிகளும் நிகழ்ந்துவிடுகிறதே. இதைப் பற்றி என்ன செய்யமுடியும். ஆனால், எல்லாக் காரியங்களிலும் முன் ஜாக்கிரதையாக இருந்துவரவேண்டியது முக்கியம். மேலும் நீ சொல்லிய இத்தனையும் திண்ணை கட்டிவிட்டிருக்கும் வீட்டைப் பாதிப்பதாயும் இல்லை. வெளித் திண்ணை யிருந்தால் நான்கூட உள்ளே வந்திருக்கமாட்டேன்; இடம் வசதியில்லையென்று சொல்லுவது ஒரு போக்குச் சொல்லேயாகும். கொஞ்ச இடத்தை ஒதுக்கி திண்ணை கட்டி வைப்பதில் வசதிக் குறைவு ஒன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. சாதாரண ஜனங்கள் கூட மன வீதியுண்டானால் இட வீதியுண்டென்று சொல்வது வழக்கம். இதற்குதாரணமாக பக்த கோடிகளாகிய ஆழ்வாராதிகளுக்கு ஸ்ரீமந் நாராயண மூர்த்தி சேவை சாதித்த வரலாறொன்றைச் சொல்லுகிறேன். முதலாழ்வாரென்று பேசப்படுபவர்களாகிய பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வாராகிய மூவரும் தனித்தனியே ஸ்தல யாத்திரை செய்துகொண்டு வந்தார்கள். இவர்கள் ஓரிடத்தும் இரவு பகலாய் நிலைத்துத்தங்குவதில்லை. இப்படி யாத்திரை செய்துகொண்டு வரும்பொழுது ஒருநாளிரவு பொய்கையாழ்வார் பாதசாரியாகப் போய்க்கொண்டிருக்கும்போது கனத்த மழை வந்துவிடவே அயலிடம் போக வழியில்லாமல் பக்கத்திலுள்ள ஒரு சிறு வீட்டுக்கு முன் சென்று சுவாமி இவ்விடத்தில் ஒருவர் படுக்க இடந் தரமுடியுமோவெனக்கேட்க, வீட்டுச் சொந்தக்காரர் முன்முகப்பிலுள்ள ஒரு ஒடுக்கமான அறையைக் கட்டி இதில் ஒருவர்தான் படுத்துக் கொள்ளலாமென்று கூறி இடஞ் செய்துகொடுக்கவும் பொய்கை ஆழ்வார் இதில் துயில்கொண்டிருக்குஞ் சமயம் பூதத்தாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்து இன்றை இரவுமட்டும் தங்கிப்போக

இவ்விடத்தி லிடங்கிடைக்குமோ வெனக் கேட்க சுவாமிகளே இவ்விடத்தில் ஒருவர் படுக்கலாம், இருவர் இருந்துகொள்ளலா மென்று கூறி இருந்துகொள்ள இடங்கொடுத்துதவினார். இவ் விதம் இவ்விருவருமிருந்துகொண்டிருக்கையில் பேயாழ்வாரும், ஸ்ரீ லக்ஷிமி சமேதரன் சோதனையால் அவ்விடத்திற்குவந்து இங் கேஒருவர் தூங்குதற்கு இடந்தந்துதவுதல் முடியுமோ வெனவினவ பொய்கையாழ்வார், ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம் மூவரானால் நிற்கலாமென்றுபசரித்தழைக்கவும் பின் மூவரும் ஒருவருக்கொருவர் நமஸ்காரஞ்செய்து, பணிந்துகொண்டு, அள வளாவி, சுகக்ஷேமாதிகளை விசாரித்து மகிழ்ச்சியுடனிருந்து கொண்டிருக்கும் பொழுது இந்தப்பக்த குழாங்களுடன் தானும கலந்து காட்சி கொடுக்கக் கேசவமூர்த்திக்கும் ஆசைமேலிட்டு எழுந்தருளிச் சென்று அவர்களோடு சேர்ந்துகொள்ளவும் மூவ ருக்கு மிடையே மிக நெருக்கடியுண்டாகவே, முன்னில்லாத நெருக்கடி திடீரென இவ்விதம் ஏற்படக் காரணமென்னவென்று மூவரும் ஞான நோக்கால் பார்க்கவே இது ஸ்ரீவாசுதேவனது அருள் விளையாட்டெனத் தெரிந்து மகிழ்ந்து அவரது, உண்மைச் சொரூபத்தை ஆனந்தமாய்த் தெரிசித்து அந்தாதிகள் பாடினார் களாம். ஆகையால் மனமிருந்தால் இடம் வாய்க்கும். எல்லாம் வல்ல இறைவனால் படைக்கப்பட்டிருக்கும் இப்பரந்த பூமியில் இயலுமாற்றான் யார்க்கும் இடங்கொடுக்க வேண்டியதாய் யேற் படும் சமயங்களை நழுவவிடக்கூடாது, ஏற்கனவேயிடம் பண்ணி யும வைத்திருக்கவேண்டும் என்று கூறினார். இவைகளைக்கேட்ட வீட்டுக்காரர் சுவாமி அறியாமற் சிறியேன் சொன்ன பிழைகளைப் பொருத்தருளல் வேண்டும். நீங்கள் சைவ சித்தாந்தியாயிருந் தும் எங்கள் ஆழ்வாராதிகள் சரித்திரத்தையே யாதாரமாகக்காட் டிப் பேசினீர்கள். இதனால் நான் மிக மகிழ்ச்சியை யடைந் தேன் என்று கூறவும், சந்நியாசி யார் உண்மைச் சைவ சித்தாந் தியோ அவர்களிடத்து துவேஷபுத்தி யிருப்பதில்லை, எல்லாச் சமையங்களையும் சோபானமார்க்கமாய்க்கொண்டு அச் சமயத்தி லுள்ளவர்களது பக்குவா பக்குவத்திற்கேற்ப படிப்படியாயுயரச்

செய்து சமரச நன்னிலையிலேகொண்டுபோய் சேர்ப்பதுதான் உண்மைச் சைவ சித்தாந்தமும், அவ்வழி நின்று நடந்து வருவோரும் தான உண்மைச் சைவ சித்தாந்திகளாவார்கள். உனது விருப்பப்படியே இப்பக்கம வருமபொழுது உன்னை வந்து பார்க்கிறேனென்று சந்நியாசி சொல்லிவிட்டுப்போனாராம, என்று வளளி சொல்லி மேலும் சொல்லுகிறாள். இவைகளை யெல்லாம் நோக்குமபோது எனக்கு பெரிய வீடாயில்லையே யென்ற எண்ணம ஒருசிறிதுமில்லை யென்று கூறி முடிக்கவும்; இதனைக் கேட்ட மூவரும வள்ளி நீ சொல்லிய யனைத்தும கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம. கலியாண வீட்டுக்காரரும எங்களைத்தேடிக காத்திருக்கக்கூடும நாஙகள் நாகைக்குச் செல்வதற்கிடையே திருமபவும உன்னை வநது பார்க்கிறோமென்று வள்ளியிடம விடைபெறறுக்கொண்டு கலியாண வீட்டுக்குச் சென்றாகள். சுபம்!

---

## பிணம்போற்கிடத்தல் (ஓய்வும் உழைப்பும்).

சென்னை திரு கா. சி. சிவசங்கர முதலியாரவர்கள்,

---

மூளைக்கு அதிக வேலை கொடுத்து களைப்படைந்தாலும உடமபிற்கு அதிக வேலை கொடுதது களைப்படைநதாலும நலல காற்றுலாவுமிடத்தில சுத்தமான படுககையில் கால்களை நன்றாக நீட்டிவிட்டு பிணமபோற் படுத்துக்கொண்டு கண்களை மூடிக்கொணடு மனதில எண்ணம ஒனறும இல்லாதவாறு கவலையறறப் படுத்துககொண்டு ஓய்வு எடுத்துககொள்ளுதல் வேண்டும. களைபபுத் தோனறிய பினனுங்கூட வேலைசெய்தல் உடமபைக கெடுத்துககொள்வதறகு வழியாகும. மேல் நாட்டறிஞர் இதை (Relaxation) ரிலாக்ஸேஷன் எனறு சொலலுவார்கள். வேலையும் ஓய்வும மககளுககு அடுத்தடுத்து வரவேண்டும் மூளைககே வேலை அதிகம கொடுககினறார்கள் பலர். மூளைக்கு ஒரு வேலையும கொடுககாமல் உடம்பிற்கே வேலை கொடுககிறார்கள் பலர்.

இவை இரண்டுந் தீய குணங்களையே பயக்கும். ஒரு இரும்புச் சாவியை உபயோகிக்காமல் ஆணியிற் றூக்கவிட்டிருந்தால் சில காலத்திற்குள் அது துருப்பிடித்துவிடும். கையில் வைத்துப் பழகிக்கொண்டுவருகிற சாவி வெண்மையாய் பளபளப்பாக இருக்கின்றது. அது போலவே, அளவாக வேலைசெய்கின்ற மூளையும அளவாக வேலைசெய்கின்ற உடம்பும் அளவாக எடுத்துக்கொள்ளும் ஓய்வும மக்களுக்கு நோயற்ற உடம்பையும நீடித்த ஆயுளையும கொடுக்குமென்று பெரியோர், அறிவுடையோர் கூறுகின்றார்கள். பறவைகளும் விலங்குகளும உலகம உண்டான காலந் தொடங்கி ஒரே வகையான உணவு, ஒழுக்கம, வீடு வாழ்க்கையுடையனவாய் இருக்கின்றன. அவைகளுக்கு இறைவன் கொடுத்த இயற்கையறிவு என்றும மாறுபடுவதே இல்லை அதனால் அவைகளுக்கு வயித்தியசாலைகள இல்லாமலே அவைகள இறக்குமவரை உடல நலத்துடன வாழ்கின்றன.

ஆண்டவன் மக்களுக்குமட்டும நுண்ணறிவைக் கொடுத்திருக்கின்றான். அவ்வறிவால் மக்கள் நோயற்றவயிர உடம்பையும சாகா நிலையையும பெறுவதைவிட்டு, பொய்,வஞ்சகம், பொறாமை, களவு, கொலை முதலிய தீய குணங்களையேற்று உணவையும, உடையையும, ஒழுக்கத்தையும, வீட்டையும தாம தாம விரும்பியபடியெல்லாம மாற்றி மாற்றி நோய் குடியிருக்கும மெலிந்த நிலையற்ற மெய்யோடு நடைபிணமாய் கிடக்கின்றாகள். மூச்சு வெளியே போய்க்கொண்டிருப்பதாலேயே வயது குறைகின்றது உடம்பு மெலிகின்றது. வெளியே போகின்ற மூச்சை மடைமாற்றித்திருப்பி மூளைவழியாய் ஆதார நாடியிற் செலுத்தி வந்தால வயது நீடிக்கும உடம்பும உறுதியாகும. இதைப்பற்றித் தமிழ் நாட்டுச் சித்தர்கள உணர்ந்தபடி வடநாட்டு இருடிகளும உணரவில்லை. வடநாட்டு நூல்கள் மூக்கால் இழுக்கும மூச்சை நீள இழுத்து மூக்காலேயே பின்னும வெளியாக்கவே சொல்லுகின்றன. தமிழ முனிவர் நூல்களோ உடம்பிலுள்ள தீய காற்றை மூக்கின் வழியாய் முதலில் வெளியாக்கிவிட்டு பிறகு சிறிது நேரம சும்மாவிருந்து வெளிக்காற்றை மூக்கால இழுத்து உடம்பு

நிறைய நிரப்பிப் பிறகு அகார உகார மகார மந்திரமாகிய ஓங்கார மந்திரத்தை ஆசிரியன் திருவருளால் நிகழ்த்தக்கற்று அம்மூச்சை உடம்பில் உள்ள உயிர் நாடிகளில் நிரப்பிவர வாத பித்த கப நீர்கள் ஒழிந்து தூய்மையான உயிர் நிரம்பிய நல்லிரத்தம் உடம்பிற் காணப்பெறும், நரைத்தமயிர் கருத்துவிடும், உடம்பு தீவண்ணமாகும். இளமை நிலைபெறும்.

"புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நிறமல மாக்கில்
உறுப்பு சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே" திருமூலர்.

---

## சோமநந்திச் சருக்கம்

### திருவாளர் பொ. முத்தையபிள்ளை அவர்கள்

உயிர்களை வருத்தும் அரக்கர் குலத்தில், ஓர் அரக்கன், தன்னுடைய பற்களாலுந் தண்டாயுதத்தாலும் கொல்லப்பட்ட பல உயிர்களின் தசைகளைத்தின்றும், கள்ளைக்குடித்தும், தேவர் முனிவர் பெற்றதாய் முதலியோரிடத்துங் கோபந்தணியாதவனாய், தீவினையின் சேட்டத்தால் பூமியில் புலியாய்ச் செனித்தான்.

அப்புலியானது, மலையினிடத்தும், வனத்தினிடத்தும், வழியினிடத்தும், இலையினிடத்தும், இரவினிடத்தும், மலைப்பிளவுகளினிடத்தும் மறைந்திருந்து, வாலையடித்து, வாயைப்பிளந்து, கையிலுள்ள நகத்தையசைத்து, இடிபோலச் சத்தித்து மேலெழுந்து பாய்ந்து, உயிர் வருந்தும்படி யறைந்து, மக்களோடு மிருகங்களனைத்தையும் தினங்கொன்று பிணத்தின் தசையைத் தின்றும், இரத்தத்தைக் குடித்தும், பகற்காலத்தில் காட்டில் குடியிருந்தும், பூமி முற்றுந் திரியுங்காலத்தில், கெட்ட விதியினுள் நல்லவிதி யொன்றிழுக்க வசிரவனத்தை யடைந்தது.

இந்தப்புலி வசிரவனத்தை யடையுமுன், வனமுக நாதராகிய சிவபெருமான், ஒரு திருவிளையாட்டால், வேடவடிவங்

கொண்டனர். உமாதேவியாரும் வேடப்பெண் வடிவங்கொண்டனள். வேடவடிவங்கொண்ட இவ்விருவரும், ஒரு தாமரைத் தடாகத்தின் பக்கத்திலுள்ள சோலையில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும் பொழுது உமாதேவியார் திருமேனி, கருமையாயிருந்தமையால், சுவாமி உமாதேவியாரைப் பார்த்துக் காளியென்றழைத்து நகைக்க, உமாதேவியார் நாணமடைந்து, மனங்கலங்கித் தலைகுனிந்து இறைவனைவிட்டு நீங்கி அரவநதியின் பக்கத்தில் ஒரு சோலையையடைந்து நதியில் விதிப்படி முழுகி திருவைந்தெழுத்தையுச்சரித்து விபூதிஉருத்திராக்கமணிந்து யோகாசனத்தமர்ந்து தவஞ்செய்து கொண்டிருக்குங் காலத்தில், வச்சிர வனத்தையடைந்த புலியானது, அந்தச் சோலையை யடைந்து, எல்லாவுலகங்களையும் எல்லாவுயிர்களையுந் தோற்றுவித்துத் தன்னிடத்து ஒடுக்கவல்ல உமாதேவியாரைப், பசியின் கொடுமையால் தன் வயிற்றினிடத்து வைக்க நினைந்து, மேற்சென்று கையையசைத்துப் பாய்தற்கு நெருங்குங் காலத்தில், அம்பிகையின் திருமேனியைப்பார்த்த பாக்கியத்தால், ஞானம் உண்டாக, அம்பிகையைத் தொழுது யானுய்யும் நெறியையருள வேண்டுமெனப் பல முறை பணிந்தது.

புலிவடிவமாயிருக்கின்ற அரக்கனுடைய பிரார்த்தனைக்கிரங்கி இந்த அரவநதியில் முழுகி ஆலயத்தையடைந்து மானதமாகச் சிவபெருமானைப் பூசித்தால் வேண்டிய வரங்களைச் சிவபெருமான் தந்தருளுவாரென்று உமாதேவியார் கூற அம்மையார் திருவடியை வணங்கி மீண்டு, அரவநதியில் முழுகி ஆலயத்தையடைந்து விநாயகரையும் சுவாமி அம்பாளையும் பூசித்து, சுவாமி சன்நிதியையடைந்து வலம்வந்து வணங்கிக் குவித்த கையுடன் உள்ளத்தில் இறைவனை யெண்ணுங் காலத்தில், சிவபெருமான் இடபத்தின்மீது தோன்றி புலிவடிவான அரக்கனைப்பார்த்து, வேண்டும் வரங்களைக் கேட்பாயாக என்று கூற, என்னுடைய கொடிய வினை கெடவேண்டுமென்று புலி பிரார்த்திக்க, சிவபெருமான் அவ்வாறேயருள் புரிந்து புலிக்குச் சாரூபமுங் கொடுத்து, உமாதேவியார் வாக்கின்படி சோமநாதனைப் பூசித்துச் சாரூபம

பெற்றமையால் சோமநந்தி யெனப் பெயருஞ் சூட்டினர். சாரூபம்—சிவபெருமான் திருமேனியைப்போலத் திருமேனிபெற்று வாழ்தல்.

வரம்பெற்ற சோமநந்தி, மகிழ்ச்சியுடன் முன்செல்ல, உமாதேவியார் தவஞ்செய்து கொண்டிருக்குஞ் சோலையைச் சிவபெருமான் அடைந்து இடபத்தினின்றும் இறங்கித் தவத்தால் மெலிந்திருக்கும் உமா தேவியாரைப் பார்த்துத் தன் மார்போடணைத்து துடையில் வைத்து, ஞானம், புகழ், செல்வம், வீரியம், திரு, வைராக்கிய மென்னும் ஆறினுக்கும் உரியவள் நீயேயாவாய்; இதுவன்றி உயிர்கள் வீடுபெறுதற்கு அருள் செய்யுஞ் சிவசக்தியும் நீயேயாவாய்; இத்துணைப் பெருமைவாய்ந்த நீ எவ்வரத்தை விரும்பி யிவ்விடத்தில் தவஞ்செய்கின்றாய் சொல்வாயென்று சிவபெருமான் கேட்க, உமாதேவியார் எழுந்து சிவபெருமான் றிருவடியை வணங்கி, சுவாமி! சோலையினிடத்து என்னைப்பார்த்து நீ காளி யென்றுகூறிப் புன்னகை செய்தமையால், நான் நாணிக் கலங்கினேனாதலால், மின்போன்ற வடிவத்தோடுகூடிய கவுரி யென்று சொல்லும்படியான வரத்தை வேண்டித் தவஞ்செய்கின்றேனென்று கூறச், சிவபெருமான் அவ்வாறே வரங்கொடுத்து உமாதேவியாரைப் பார்த்துக் கூறுகின்றார்.

நம்முடைய ஆலயத்தின் வாயிலில் நந்தியைப்போல் இந்தச் சோமநந்தியிருந்து காத்தற்றொழிலைச் செய்கவென்றுகூறிச் சிவபெருமான் மறைந்தனர். அவ்வாறே சோமநந்திக்கு உமாதேவியார் அநுக்கிரகஞ்செய்து அச்சோமநந்தி வணங்கச்சென்று தமதாலயத்தையடைந்தனள்.

---

## சர். ஜகதீசர் ஆராய்ச்சி.

சர் ஜகதீச் சந்திரபோஸ் தற்போது உலகத்திலேயே சிறந்த ஓர் விஞ்ஞான சாஸ்திர நிபுணராக விளங்குவது உலகமறிந்த விஷயம். சில தினங்களுக்கு முன் அவர் தாம புதிதாகக் கண்டு பிடித்திருக்கும் ஆச்சரியகரமான ஆராய்ச்சிகளை இந்தியா மந்திரி

சபையில் பரிசீலனை செய்துகாட்டினார். இந்தியா மந்திரி ஸ்ரீ வெஜ்வுட் பென்னுடைய அழைப்பின் மீதே அவர் அங்கு சென்று, தாம் சமீபத்தில் புதிதாகக் கண்டுபிடித்திருக்கும் ஓர் உயர்ந்த கருவியைக் காட்டினார். ஓர் பொருளை 5 கோடி மடங்கு பெரிதாகக் காட்டுகக் கருவியைப் பார்த்ததும் இந்தியா மந்திரி உள்பட பல பிரமுகர்கள் ஆச்சரியப்பட்டு சர், ஜகதீசர் கண்டுபிடித்திருக்கும் புதியகருவியானது விஞ்ஞான உலகத்திற்கே இன்றியமையாத பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதென அவரை வாழ்த்தினார்கள். விஞ்ஞான சாஸ்திரத்தில் சர். ஜகதீசர் தற்போது ஓர் திலகம் போல் விளங்குவதுபோன்று கவி தாகூர், அரவிந்தகோஷ், மகாத்மா காந்தி, பண்டித மோதிலால் நேரு முதலியோர் மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒவ்வோர் உயர்ந்த விஷயத்திலும் ஓர் திலகம்போல் விளங்குதை உலகத்திலுள்ள எந்த தேசத்தினரும் மறுக்கமுடியாது. 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை சர். ஜகதீச சந்திரபோஸ் . சாமர்த்தியத்தைப்பற்றி மிகவும் புகழ்ந்து கூறிவிட்டு, இவ்வளவு உயர்ந்த விஞ்ஞான சாஸ்திர நிபுணர் கண்டுபிடித்திருக்கும் கருவிகளைக் கொண்டு, இந்தியாவிலுள்ள இயற்கை வளங்களை எவ்வளவோ முன்னேற்றமடையும்படி செய்யலாமெனக் கூறுகிறது. இந்தியா இயற்கை வளங்களுடனும் செழுமையாக இருக்கவேண்டுமென்ற விஷயத்தில் 'மாஞ்செஸ்டர் கார்டியன்' இவ்வளவு தூரம் வாசாகைங்கரியம் செய்வதிலாவது சிரத்தையெடுத்துக்கொண்டது நமக்குச் சந்தோஷமே! எனினும், இந்தியாவில் எவ்வளவு புத்திசாலிகளும், இயற்கை வளங்களும் இருந்தாலும் பிறதேசத்தினரிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும்வரை இந்தியாவுக்கு யாதொரு கதிமோக்ஷமும் உண்டாகாதென்பது "மாஞ்செஸ்டர் கார்டியன்" போன்ற ஐரோப்பியப் பத்திரிகைகள் அறியாத ரகசியமல்ல. இந்தியா இவ்வளவு இயற்கைவளங்களுடன் இருந்தும் இது முன்னேற்றமடையாமலிருப்பதற்கு அன்னிய நாட்டு சர்க்கார் ஆதிக்கமும், இந்தியர் அடிமைத்தன்மையும்தான் காரணம். எப்பொழுது இந்தியா தன் அடிமைச் சங்கிலியை அறுத்தெறிகின்றதோ அன்றுமுதல், எவ்விஷயத்திலும் மற்ற தேசங்களைக்காட்டிலும் இந்தியா சிறந்துவிளங்குமென்பதி லையமில்லை.

## வேளாள இளைஞர்கட்கு வேண்டுகை

(திரு. ஸி. பி. ஆனந்தம், அவர்கள்.)

---

கடவுளுக்கும் நமக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை நிதர்சனமாக்கப் புகுந்தது மதம். அது பல தரத்ததாக அமைவன. அவ்விதம் அமைந்தன பலவற்றுள்ளும் தலைக்கண்ணுள்ளது சைவ சமயம். இதன் உண்மையை நிலைநிறுத்த வந்தவர் நால்வர். அந் நால்வருள் முதல்வர் சம்பந்தராவர். இவர் கண்ட தெளிவை உணர்த்தும் அவரது திருப் பதிகங்கள் கடவுளின் இலக்கணங்களை மிகவும் தெளிவாக விளக்குகின்றன. இதனைப் (இவ்வுண்மையினைப்) பிற அன்னிய நாட்டினர் தம் தம் மொழிகளில் பெயர்த்து வைத்து உணருமிக்கால், நாம் உபேட்சையாக விருப்பது தகுதியுடைத்தன்று. நம் நாட்டு இளைஞர்கட்குச் சமய உணர்ச்சியும், மதப்பற்றும் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. அது (அவ்விதங் குறைந்து வருவது) நாட்டின் வளர்ச்சிக்குச் சிறிதும் உதவிசெய்ய முடியாது. நமது சமய உண்மைகளை ஆராய்ச்சி செய்து உணரல் வேண்டும். இதில் துவேஷ புத்தியாவது, குதர்க்க வாதமாவது கிளம்பிவிடலாகாது. நிதான புத்தியுடன் ஈசுர பக்தியும், நம்பிக்கையும் நம்மில் இருந்தால் தான் உண்மையின் தெளிவு உண்டாகும்.

நம்பிக்கையும், ஆராய்ச்சியும் ஒன்றுக்கொன்று எட்ட முடியாத மாறான இரண்டு கோடி (Extremities) களாக விருப்பினும், ஒவ்வொன்றின் நிலைப்பிற்கும் மற்றொன்று அடிநாதமாக இலங்குவதாகும். நம்பிக்கை ஆராய்ச்சியின்றியும், ஆராய்ச்சி நம்பிக்கையின்றியும் நிலைப்பதில்லை. இவ்விரண்டிற்கும் இவ்வளவு நெருங்கிய சம்பந்தமிருக்கின்றது. நம்பிக்கைப் பிழம்பின் ஆவேசத்து ஊஞ்சலாடுகிறவர்களை ஆராய்ச்சிக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் கூட்டத்தாருக்குக் கொஞ்சமும் பிடிக்கிறதில்லை. ஆராய்ச்சி உலகின் போக்கு இதுகால், அதிலும் நம் தமிழ் நாட்டில் விசேஷமாக நாஸ்திகத்தினும் கடைகழிந்த ஒரு மோசமான கொள்கையை உருப்படுத்தி வருகின்றது.

தெய்வத் திரு தவழும் தென்னாட்டில், கடவுளுக்கும் மனித ருக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தை நிதர்சனமாக உணர்ந்த அனுபூதிகள் பெருகிய இந்த நாட்டில் தற்காலம் எய்தியுள்ள நிலை மிகவும் வருந்தற்குரியது. ஆராய்ச்சிக்காரர் எனப் படுவோர் உண்மையில் ஆராய்ச்சிக்காரராக விருக்கவில்லை. கடவுளைப்பற்றிய ஆராய்ச்சியில் நம்பிக்கைப் பிழம்பின் பலத்தில் முனையுமொருவன் நிச்சயம் வெற்றிபெறுவான். அவ்விதம் வெற்றி பெற்றவர்கள் காவியத்தும், ஓவியத்தும் தாம் கண்ட ஸ்வானுபவமான சத்திய தரிசனத்தைப் பொறித்து வைத்தனர். காவியமும், ஓவியமும் கண்கூடாகக் காட்டுவது கடவுளின் நிலையைத்தான் என்பது உண்மை. உண்மை கண்ட மெஞ்ஞானிகள் தங்கள் அனுபவங் களை அதாவது தாங்கள் கண்ட உண்மையினை பாவெளியின் மேலீட்டால் உள்ளம் பறிகொடுத்து மொழிந்த திருவாய் மொழி கள் உற்று நோக்குவோர்க்கு காவியமும், ஓவியமும் குறிக்கும் குறிக்கோள் இன்னதென்பதும், அதன் முறை வசத்துள்ள நெறி நேர்மையும் இனிது விளங்குவதாம்.

மதங்களின் தத்துவ மெல்லாம் பணி செய்து கிடப்பதன் கண் அடங்கிவிடும். தீர்வை பெற்ற பெரிய முனிவர்களும் பணி செய்து கிடத்தலே கடனென்று தம்தம் உலகிற்கு உரிய சேவை செய்தனர். செயற்கரியதான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் பெரியவர்கள். அது எப்படி முடிந்தது என்று நீங்கள் ஆச்சரி யப்படலாம். அது ஜால வித்தையல்ல; மந்திரமும் தந்திரமு மல்ல. நம்பிக்கை என்னும் நாதத்திற்கு உலகு முழுவதும் அனு நாதஞ் செய்யும் என்பது விதி. நீங்கள் நம்பிக்கையுடைய தீரர் களாக உங்களுடைய ஊக்கம் நிறைந்த கவனங்களைக் கடவுளைக் கருதிய தேசப் பணியில் செலுத்துங்கள். வெற்றி உங்களு டையதாக விருக்க உங்களைச் சுற்றியுள்ள பிரகிருதி தேவியின் ஒவ்வொரு அம்சமும் அது நாதஞ் செய்துகொண்டிருக்கும். உங் கள் நாடும், மதமும் பரிசுத்தமாக மிளிர, அரியன அனைத்தும் உங்களுக்கு மிக மிக எளிதாக அமையும்.

"எங்கும் அன்பரைப் பூசைசெய்து எழுபிறப்பறுப்போம்
எங்கும் நாயகன் வடிவுணர்ந்து இருண் மலங் களைவோம்"

இதுதான் பெரியார் (அதாவது சைவராயினர்) கண்ட வெற்றியாகும். இக்காட்சியினை காலகதியின் போக்கில் இழந்த நமது தென் தமிழகம் திரும்பவும் சீர்பெற முக்கட் சுடர்க்கு விருந்திடும் மும்முலையாளை எக்காலும் வழுத்துவம்.

---

## குறிப்புகள்.

### நமது பத்திரிகை

ஆண்டவனருளாலும் அன்பர்கள் ஆதரவாலும் அரை வருடம் இத்துடன் இடுக்கணின்றி இனிது நமது பத்திரிகைக்கு பூர்த்தி யடைகின்றது. சென்ற மாதம் நேயர்கள் பலருக்கு வி. பி. அனுப்பினோம். பலர் பெற்றுக்கொண்டு பணம் அனுப்பித் தந்தனர். சிலர் வி. பி. யைத் திருப்பிவிட்டனர். திருப்பியவர்களில் ஆர்டர் கொடுத்தவர்களே அதிகம். செல்வமும் செழிப்பாகப் பெற்றவர்கள், திருப்பிய காரணந் தெளிவாகத் தெரியவில்லை. பணத்தை மணியார்டர் மூலம் அனுப்பித்தருவார்களென எண்ணுகின்றோம்.

### சந்தாவும் சமுகப்பற்றும்.

சமுக கனவான்களில் பலர் இரண்டு ரூபாய்ச் சந்தா அதிகமெனச் சொல்லுகின்றார்கள் அதனை நாம் மறுக்கவில்லை. ஆனால் ஆரம்ப வருடமானதாலும் சமுகப் பத்திரிகைகளில் இதைவிடக் குறைந்த சந்தா எப்பத்திரிகைக்கும் இல்லையாதலாலும் தற்காலிகமாக இரண்டு ரூபாய் வைத்திருக்கிறோம். 2000 ஆயிரஞ் சந்தாதார்கள் சேர்ந்து ஆதரிப்பதா யிருந்தால் ரூ. 1—8—0, மூவாயிரம் சேர்ந்தால் ரூ 1—0—0 ஆக்குவதில் நமக்கு ஆட்சேபனையில்லை. ஆண்டவனருளால் அடுத்த வருடம் ரூ. 1—8—0க்கு கொண்டுவர அன்பர்கள் ஆதரவு தருதல்வேண்டும். தற்பொழுதுள்ள சந்தாவைக் கருதாமல் அபிமானத்தைக் கருதி அனைவரும் ஆதரவுதரும்படி வேண்டுகின்றோம்.

### திருமணங்களும் நன்கொடைகளும்.

நமது சந்தா நேயரும் திருநெல்வேலி தென்னிந்தியா பேங்க

கிளார்க்குமான திரு. ஈ. திருஞானம் பிள்ளையவர்களுக்குக் குலசை திரு. சி. வ. ஆனந்தநடராஜ பிள்ளையவர்கள் புதல்வி, திருவளர் செல்வி, மங்கயர்க்கரசியம்மாளை சென்ற ஆவணிமீ 20உ புதன் இரவுநற்பொழுதிலும், நமது வேளாளனின் ஏஜெண்டும் பேட்டை திருஞானசம்பந்தர் திருவருட்கழக அமைச்சருமான சிரஞ்சீவி பொ. அ. முத்துவிநாயகம் பிள்ளைக்கு நம் நகர் பிரபல வியாபாரியும் நமது சந்தா நேயருமான திரு. அ. சிவன் பிள்ளையவர்கள் கொழுந்தி திருவளர்செல்வி, கோமதியம்மாளை சென்ற ஆவணிமீ 21உ வியாழக்கிழமை இரவு நற்பொழுதிலும், கல்கத்தா பிரபல வியாபாரி திரு. P.S. சுப்பிரமணியபிள்ளை யவர்கள் இளையகுமாரர் செல்வச்சிரஞ்சீவி விஸ்வநாத பிள்ளையவர்களுக்கு, தூத்துக்குடி பிரபல வியாபாரி திரு. மு. சி. முத்துக்குமாரசாமி பிள்ளையவர்கள் இளைய சகோதரி திருவளர்செல்வி சூரியத்தம்மாளை சென்ற ஆவணிமீ 29உ வெள்ளிக்கிழமை இரவு நற் பொழுதிலும் தூத்துக்குடி ஏ. அண்டு எவ். ஆர்வி மில்லாபீஸ் கிளார்க்கும் நமது சந்தா நேயருமான திரு. V. S. இராமசாமி பிள்ளை யவர்களுக்கு முத்தலாபுரம் டிரஸ்டியும் நமது சந்தாநேயருமான திரு. மு. சிவ சங்கரன் பிள்ளையவர்கள் இளைய மகள் திருவளர்செல்வி ஆவுடையம்மாளென்றராஜம்மாளை சென்ற ஆவணிமீ 31உ ஞாயிற்றுக்கிழமைநற்பொழுதிலும்திருமணங்கள் சிறப்புடன்நடந்தேறியன. மணமக்கள் பல்லாண்டு பலபேறுபெற்று வாழப் பரமன் அருள்பாலிப்பாராக. அன்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற நன்கொடை கொடுத்துதவி யிருக்கிறார்கள். மற்றவர்களும் இதனைப் பின்பற்றுவார்களாக.

### விரிந்த நோக்குடன் விளங்குவது.

நமதுவேளாளன் பத்திரிகை ஜாதித் துவேஷம் சமயத் துவேஷம் இன்றி யாவரும் விருப்புடன் வாங்கிப் படிக்கத்தக்கதென்ற கருத்துடன் இலங்கைப் பகுதியினின்று நாம் முன்னறியாத முஸ்லீம் நண்பர் ஒருவர் நமக்கு நீண்ட கடிதம் ஒன்று வரைந்தனுப்பித், தமக்குப் பத்திரிகை அனுப்பவேண்டுமென்றும் எழுதியிருக்கிறார். நண்பரின் அன்பான கடிதத்தை அடுத்த இதழில் வெளி

யிடுவோம். நமது பத்திரிகை பொய்ராளவில் சமூகத்தைக் குறிப்பிடினும் மற்றவர்களும் விரும்பி வேண்டத் தக்கதென்பதற்கு முஸ்லீம் நண்பரின் கடிதமே போதிய சான்றாகும். இதன்முன் கிறிஸ்தவநண்பர்களும் இவ்விதம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, பேதமற்றுப் பிணக்கற்றுக் கூடிக்குலாவித் திரியும் தமிழ்நாட்டில் விசமிகள் சிலர் பிணக்கையுண்டுபண்ணப் பிரயத்தனப்படுகின்றனர். அவர்கள் பிரயத்தனம் விழலுக்கு இறைத்த நீராகின்றதென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

## பேட்டையில் பிரிவினைக்குப் பிரயத்தனம்.

பேட்டை நகரில் இந்துக்களும் முஸ்லீம்களும் தொழில்த் துறைகளிலும் பிறதுறைகளிலும் இந்து முஸ்லீமென்ற வேற்றுமையின்றி தோழோடு தோழாகத் தோழமைகொண்டு கூடிக் குலாவி வாழ்ந்து வருகின்றார்கள். இதனிடத்து அழுக்காறு கொண்டும் திருநெல்வேலி முதலிய இடங்களில் தங்கள் விஷமத்தனம் பலியாமையாலும் விஷமிகளில் ஒருவர் முஸ்லீம் சகோதரர்களையும் இந்துக்களையும் பிறித்துவிட்டு தங்கள் விஷமப் பிரசாரத்தை நடத்த ஆரம்பிக்கின்றார். ஆதலால் முஸ்லீம் சகோதரர்கள் விஷமியின் சூழ்ச்சியில் அகப்படாமல் "ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு" என்பதனை நினைந்து வாழும்படி மிக வணக்கத்துடன் வேண்டுகின்றோம்.

## நமது கடமை

நாம் நமது தொண்டைப்பத்திரிகையின் மூலம் ஆற்றுவதுமன்றி இனி சமயநலங் கருதியும் வகுப்புநலங் கருதியும் எவ்வகுப்பினரும் எம்மதத்தினரும் எங்கு அழைத்தாலும் அங்குசென்று விசமிகளின் சூழ்ச்சிப் பிரசாரத்தை யடக்கி ஆஸ்திகப் பிரசாரஞ் செய்ய நாம் முன்வந்துள்ளோம். ஆகையால் அன்பர்கள் ஆங்காங்கு சங்கங்கள் நிறுவி வேண்டுவன செய்ய விரும்புகின்றோம். நமக்கு வழிச்செலவுதவிர வேறு ஒரு காசுந்தேவையில்லை. எந்த இடத்திலும் இரு தினங்களுக்குமேல் தங்க இயலாது.

மனம் உவந்த நன்கொடை.

நமது உயிர்த்துணைவரும் காவிநகர்ப் பிரபல வியாபாரியும் ஆத்துக்குடி சிவநேசச் செல்வர் சபைக் காரியதரிசியுமான திரு. ச. முருகையாபிள்ளை யவர்கள் நமது "வேளாளன்" நலங்கருதி ரூபாய் ஐம்பது நன்கொடை கொடுத்துதவி யிருக்கிறார். இந் நண்பரின் அளவிலா ஆர்வம் அறிவுடையா ரனைவரும் அகமகிழ் தற்குரியதாகும். நண்பர் இவ்வுலகில் பற்பல பேறுகள் பெற்று பல்லாண்டு வாழ்ந்துவர பரமன் அருள்பாலிப்பாராக.

நன்மொழி நல்கிய நம்மவர்கள்.

நமது நகர் பிரபல வியாபாரியும் சமூகம் சமயப்பற்று மிக்குடையாருமாகிய திரு சி. சு. வ. சுப்பையா பிள்ளை யவர்களும், பிள்ளையவர்கள் மைத்துனரும் தேவஸ்தானக் கமிட்டி வைஸ் பிரஸிடெண்டுமான அங்கமங்கலம் திரு. நெல்லையப்ப பிள்ளை யவர்களும் நமதுவேளாளன் நலங்கருதித்தகுந்த நன்கொடைகொடுத்துதவுதலோடு பலரைச் சந்தா தார்களாய்ச் சேர்த்துதவுவதாயும் நம்மிடம்மனம் மகிழ்ந்து கூறியிருக்கிறார்கள். நன்கொடை பெற்ற பின்னர் குறிப்புரை யொன்று எழுதுவோம்.

---

## நாட்டு நடப்பு.

### மதுரை

நாளது ஆண்டு ஆவணி மூலவிழா ஆடிமீ 25உ முதல் ஒவ்வொரு தினங்களிலும் வெகு சிறப்புடன் நடைபெற்றது. சென்ற ஆண்டுபோல் வீதிகளில் சுவாமி ஓட்டமில்லாமல் திருக்கண்ணுள்ள விடங்களிலெல்லாம் நின்று காட்சி கொடுத்தருளினார். இவ்வாண்டில் விஷேடமாக இந்நகர் நால்வர் திருவருட் சங்க அதிபர் திரு. சு. சிதம்பர ஓதுவாமூர்த்தி யவர்களால் தேவார பாராயணச் சிறப்புப் பலவூர் வித்வசிரோமணிகளுடனும் பக்கவாத்தியங்களுடனும் நடைபெற்றது. பக்தர்கள் பரவசமடைந்தார்கள். கோவிலுக்குப் புதிதாக வந்திருக்கும் டிரஸ்டி திரு. பாண்டியம் பிள்ளை யவர்களின் நிர்வாகத் திறமை பாராட்டத்தக்கது. பிள்ளை

யவர்கள் இறைவன் முன் விபூதி உத்திராக்கப் பொலிவோடு விளங்கிவருவது மற்றவர்களுக்கு மனமகிழ்ச்சியும் பின்பற்றுவதற்குரிய வழியுமாகுமென ஒரு சிவனடியார் அறிவிக்கிறார்.

### பேட்டை

இந்நகரில் மூன்று ஆண்டுகளாக ஒழுங்குபெற நடைபெற்று வரும் திருஞானசம்பந்தர் திருவருட்கழகத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா சென்ற ஆவணிமீ 24, 25உ களில் யாழ்ப்பாணம், திரு. மிரு. சுவாமிநாத பண்டிதரவர்கள் தலைமையில் பல் நூல் பயின்ற பண்டிதமணிகளால் பற்பல பொருள்பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று மிகச் சிறப்புடன் நடைபெற்றதென அமைச்சர் அறிவிக்கிறார். தலைவர் திரு. முருகாண்டி பிள்ளையவர்கள் முயற்சி பாராட்டத் தக்கதாகும்.

### திருச்செந்தூர்

ஆவணி மூலத்திருவிழா வழக்கம்போல் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வீராச்சாமி மேளம் கேட்போருள்ளம் கவர்ந்தன. தேங்காய் பழம் பன்னீர் முதலியன அளவற்று ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கப்பெற்றன. ஆலயத்தினுள் ஆண்டவனைத் தரிசிக்க அளவிலா மக்கள் ஆர்வத்துடன் சென்றுவரும் காட்சி காண்போருள்ளங் கவர்ந்தன. கோவில், திருவிழா வேண்டாமென்பார் பேச்சு இங்கு பலிக்கவில்லை எனப் பக்தர் ஒருவர் அறிவிக்கிறார்.

---

### நகர நடப்பு

திரு. நபிகள்நாயகத் திருநாள் 18-8-29 ஞாயிற்றுக்கிழமையன்று ஜமியத்துல் இஸ்லாம் சங்கத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. ஹிந்து முஸ்லீம் வேற்றுமையின்றி ஹிந்துக்களும் கலந்துகொண்டகாட்சி காண்போருள்ளங் கவர்ந்தன.

பெரியகோவில் திருவிழா:—வழக்கம்போல் பெரியகோவில் திருவிழா பத்துநாட்களும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஹிந்துக்களும் .கிறிஸ்தவர்களும் பேதமின்றித் திரள் திரளாகக் கோவிலுக்குச் சென்றார்கள்.

காங்கிரஸ் பிரசாரம்:—சென்ற ஆவணிமீ ஐந்து தினங்களாக நகரில் பலபகுதிகளிலும் திருமங்கலம் திரு.நித்தியானந்த அடிகள் முதலிய ஐவரால் வெகு உற்சாகத்துடன் பிரசங்கங்கள் நடத்தப் பட்டன. சுயமரியாதைக் காரரின் சூழ்ச்சி பலிக்கவில்லை. கல்லெறிந்த சில காலிகள் கைதியானார்கள்.

சுயமரியாதைப் பிரசங்கம்:—இந்நகர் சுயமரியாதைச்சங்கத்தார் 16, 17–8–29உகளில் திரு. அருணாசலம் திரு. கருப்பையா இருவர்களைத் தருவித்து முதல்நாள் பிரசங்கம் நடைபெறும் பொழுது ஒரு கிறிஸ்தவ சகோதரரால் கேள்வி கேட்கப்பட்டு கூட்டம் இடையில்கலைந்தது. மறுதினம் மிகவும் குழப்பத்துடன் ஓடி ஒழிக்கும் நிலைமையில் நடைபெற்றது. அது முதல் இன்று வரை சுயமரியாதைக்காரர் பிரசாரஞ்செய்யப் பகிரதப் பிரயத்தனஞ் செய்தும் பயன்பெற முடியவில்லை. இனி இங்கு சுயமரியாதையின் சூழ்ச்சி பலிக்காதெனத் தெரிகிறது.

தூத்துக்குடி ஸ்ரீ பாலகிருஷ்ண ஸபா ஆதரவில் சேரன்குளம் வித்வான் உபயவேதாந்தப் பிரவர்த்தகர் ஸ்ரீமான் வெங்கடாசாரியார் அவர்கள் நடத்திவருகிற ஸ்ரீமத் பாகவத கதாப் பிரசங்கத்தில் கண்ணன் திருவவதார வைபவத்தை நாளிது 9—9—29 திங்கட்கிழமை வெகு விமரிசையாய் உபந்நியாசித்தார்கள். அநேக ஜனங்கள் கேட்டு ஆனந்தமடைந்தார்கள்.

இருட்டில் எழுதும் பென்சில்:— இருட்டிலேயே, எவ்வித வெளிச்ச உதவியுமின்றி காகிதத்தில் எழுத ஒருவகைப் பென்சில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

மின்சார சக்தியால் இயங்கும் றெயில்:— எகிப்தின் பாலைவனப் பகுதிகளில் தற்போது மின்சார சக்தியாலியங்கும் றெயில் வண்டிகள் விடப்படுமாம்.